தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 147/ந/2023
நாள் 24.08.2023

திரு. V. சரவணன்,
குளித்தலை, கரூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
குளித்தலை நகராட்சி,
கரூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கரூர் மாவட்டம், குளித்தலை, கொல்லம்பட்டறை தெரு, எண்.11–15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. V. சரவணன் என்பவரின் 10.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.05.2023 அன்று பெறப்பட்டு 147/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கரூர் மாவட்டம், குளித்தலை, கொல்லம்பட்டறை தெரு, எண்.11–15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. V. சரவணன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14, கொல்லம்பட்டறை தெருவில், வீட்டு எண்.11–15–ல் வசித்து வரும் திரு. வேலாயுதன் மகன் V. சரவணன் ஆகிய நான் கடந்த 06.07.2022 அன்று குளித்தலை நகராட்சி ஆணையர் அவர்களுக்கு எனது வீட்டு அனுமதி வரைபடத்தின் உண்மைத்தன்மை கோரி மனு செய்தேன். அப்போதைய ஆணையர் பொறுப்பில் இருந்த திரு.ஆர்.ராதா என்பவர் எனக்கு எந்தவித பதிலும் அளிக்காததால், நான் குளித்தலை சிவில் இன்ஜினியர்ஸ் அசோசியேசன் உதவியை நாடினேன் அவர்கள் எனது கட்டட வரைபட அனுமதி தொடர்பாக குளித்தலை நகராட்சி ஆணையரிடம் இருந்து பதில் பெற்று கொடுத்தனர். அந்த கடிதத்தில், என்னிடம் இருந்த எனது வீட்டின் வரைபடத்திற்கும், நகராட்சி அலுவலகத்தில் உள்ள வரைபடத்திற்கும் சம்பந்தம் இல்லாமல் உள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த கடிதத்தில் குறிப்பிட்டதிலிருந்து பார்க்கும்பொழுது

என்னிடம் இருந்த கட்டட அனுமதி வரைபடம் போலியானது என தெரியவந்ததைத் தொடர்ந்து, நான் 30.12.2022 அன்று நகராட்சியில் உள்ள எனது வீட்டின் வரைபடத்தின் நகல் கோரி ஆணையருக்கு விண்ணப்பித்தேன். ஆனால் நகராட்சி ஆணையர் எனது மனுவை நிராகரித்து எனக்கு நகல் வழங்க மறுத்து கடிதம் ஒன்றை 10.01.2023 அன்று அனுப்பினார்.

அதன்பிறகு நான் வீடுகட்டும்பொழுது எனது வீட்டிற்கு நகராட்சியில் அனுமதி பெற்று கொடுத்த குளித்தலை பேராளம்மன் கோவில் தெருவை சேர்ந்த பாரதி கன்ஸ்ட்ரக்ஸன் உரிமையாளர் திரு.அண்ணாதுரை என்பவர் மீதும், குளித்தலை நகராட்சி ஆணையர் பொறுப்பில் இருந்த திரு.மனோகர் என்பவர் மீதும் நடவடிக்கை எடுக்கக் கோரி நகராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களுக்கும், மண்டல இயக்குநர் சேலம் அவர்களுக்கும் புகார் மனு ஒன்றை 20.01.2023 அன்று அனுப்பினேன். அதன்பிறகு கடந்த 24.03.2023 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் இருந்து ஒரு கடிதம் கிடைக்கப்பெற்றேன். அதில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம், அவர்களுக்கு எனது புகார் மனு தொடர்பாக ஒரு வார காலத்திற்குள் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் இதுநாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதற்கிடையில் கடந்த 03.04.2023 அன்று குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் இருந்து ஒரு கடிதம் கிடைக்கப்பெற்றேன். அதில் மேல்சொன்ன கட்டுமான நிறுவன உரிமையாளருக்கு விளக்கம் கேட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய தினம்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நகராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவுப்படி ஒரு வார காலத்திற்குள் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் குளித்தலை நகராட்சி ஆணையரும், நகராட்சிகளின் மண்டல இயக்குநரும் இனியும் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையை நான் இழந்துவிட்ட காரணத்தாலும், அரசின் முத்திரை மற்றும் அரசு அதிகாரிகளின் கையொப்பம் போன்றவற்றை போலியாக தயார் செய்து ஏமாற்றிவரும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியும், என்னை போல் வேறு யாரேனும் ஏமாற்றப்பட்டுள்ளனரா என ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்டநடவடிக்கைகள் எடுக்க உத்தரவிடக்கோரியும் தங்கள்முன் எனது இந்த மனுவை சமர்ப்பிக்கின்றேன். எனது இந்த புகார் தொடர்பாக முதன்முதலாக 06.07.2022 அன்று புகார் மனு செய்தேன். ஆனால் நான் புகார் தெரிவித்து 10 மாத காலமாகியும் இதுநாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்காத குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.மனோகர் மற்றும் நகராட்சிகளின் மண்டல இயக்குநர் திரு.ராஜன் அவர்கள் மீதும், எனது வரைபட உண்மைதன்மை சான்று கோரியும், எனக்கு சான்று அளிக்க மறுத்த அன்றைய குளித்தலை நகராட்சி ஆணையர் (பொறுப்பு) ஆக இருந்த திரு.ராதா அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டியும் எனது மனுமீது உடனடியாக குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட வேண்டியும், தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் குளித்தலை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

(3) மனுதாரரின் புகார் மனு மீதான விளக்க அறிக்கை குளித்தலை நகராட்சி ஆணையாளரால் சமர்ப்பிக்கப்படாத நிலையில் மனுதாரரும் மற்றும் குளித்தலை நகராட்சி ஆணையரும் 19.07.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.07.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. V. சரவணன் 26.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"கரூர் மாவட்டம், குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14 கொல்லம்பட்டறை தெருவில் அமைந்துள்ள எனது வீட்டின் கட்டட அனுமதி வரைபடத்தின் உண்மைத் தன்மை சான்று (Genuinity Certificate) வழங்கக் கோரி கடந்த 6.7.2023 அன்று நகராட்சியில் மனு அளித்திருந்தேன். மேற்கண்ட மனுவின் மீது நகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், 20.1.2023 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு என்னால் மனு அனுப்பப்பட்டு, மண்டல இயக்குநருக்கு 1 வார காலத்தில் நடவடிக்கை எடுக்கக்கோரி பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால், இதுவரை எவ்வித பதிலும் மண்டல அலுவலரிடமிருந்தோ, நகராட்சியிலிருந்தோ பெறப்படவில்லை.

நகராட்சியால் எனக்கு கொடுக்கப்பட்ட வரைபடம் போலி எனத் தெரிவதால், இதுபோன்ற போலி வரைபடத்தை, அரசின் முத்திரையுடன் வழங்கிவரும் நகராட்சி அலுவலர்கள் மீதும், இதற்கு உடந்தையாக இருந்த ஆணையர்கள் மீதும் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

எனவே மேற்கண்ட எனது வீட்டிற்கான வரைபட உண்மைத்தன்மை சான்றினை நகராட்சி அளித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் அளிக்கப்படும் எனது 26.7.2023 நாளிட்ட எழுத்துபூர்வ வாக்குமூலத்தையும், எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி தெரிவித்து, அதனை சமர்ப்பித்துள்ளார்.

5) மனுதாரர் திரு.V.சரவணன் மேற்கண்ட தனது 26.07.2023 நாளிட்ட எழுத்துபூர்வமான வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"கடந்த 2012 ஆம் வருடம் வார்டு எண்.14, கொல்லம்பட்டறை தெருவில் வீட்டு எண். 11–15 என்ற முகவரியில் எனது மனைவி திருமதி.சங்கீதா பெயரில் இருந்த இடத்தில் வீடு கட்டுவதாக முடிவு செய்து அதற்கான வேலைகளை மேற்கொண்டிருந்த பொழுது குளித்தலை பேராளம்மன் கோவிலை சேர்ந்த பாரதி கன்ஸ்ட்ரக்ஸன் உரிமையாளர் திரு.அண்ணாதுரை என்பவர் நான் வீடுகட்ட உள்ளதை கேள்விப்பட்டு என்னை அணுகினார். அவர் வீடு கட்டும் பணியை தனக்கு கொடுத்தால் வீடுகட்டுவதற்கான கட்டட அனுமதி, பட்டா மாற்றம் மற்றும் வீட்டு கடன் வாங்கி கொடுப்பது போன்ற வேலைகளையும் தானே முடித்து தருவதாகவும் கூறினார். அந்த சமயத்தில் நான் வெளிநாட்டில் வேலையில் இருந்ததாலும், வீட்டு வேலைகளை செய்ய ஒருவர் உதவி தேவைப்பட்டதாலும் நானும் திரு. அண்ணாதுரை என்பவரிடம் எனது வீடு

கட்டும் பணியையும், அதற்கான பட்டா மாற்றம், கட்டட அனுமதி மற்றும் வீட்டுக்கடன் வாங்குவது போன்ற வேலைகளை செய்து கொடுப்பதற்கான பொறுப்பை அவரிடம் ஒப்படைத்துவிட்டு வெளிநாடு வேலைக்கு சென்றுவிட்டேன்.

இதற்கிடையில் நான் வெளிநாட்டில் இருந்து திரும்பிய பிறகு கடந்த 2019 ஆம் வருடம் எனது வீட்டுக்கடன் முழுவதையும் திருப்பி செலுத்திவிட்டு எனது ஆவணங்கள் அனைத்தையும் வங்கியிலிருந்து திரும்ப பெற்றுக்கொண்டேன். நான் தற்செயலாக எனது பட்டாவை ஆன்லைனில் பார்த்தபொழுது எனது பட்டா பெயர் மாற்றம் செய்யப்படாமலேயே இருந்தது. இது தொடர்பாக நான் குளித்தலை வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள பட்டா மாற்றம் செய்யும் பிரிவில் விசாரித்த பொழுது, என்னிடம் இருக்கும் பட்டா செல்லாது என்றும், புதிதாக விண்ணப்பித்து பட்டா மாற்றம் செய்து கொள்ளும்படியும் தெரிவித்தனர். எனவே உடனடியாக எனது பட்டாவை மாற்றம் செய்ய மனு செய்து விட்டேன். எனது பட்டா செல்லாது என தெரியவந்ததால், எனக்கு என்னிடம் இருந்த கட்டட அனுமதி வரைபடமும் செல்லாமல் போய்விடுமோ என்ற அச்சத்தில் கடந்த 06.07.2022 அன்று குளித்தலை நகராட்சி அலுவலகத்திற்கு எனது வீட்டின் வரைபடத்தை அனுப்பி உண்மைத்தன்மைச் சான்று அளிக்கும்படி கோரினேன். ஆனால் மூன்று மாத காலமாக நான் பலமுறை கடிதங்கள் அனுப்பியும் எனக்கு எந்த பதிலையும் குளித்தலை நகராட்சி ஆணையர் அனுப்பவில்லை. எனவே நான் குளித்தலையில் உள்ள குளித்தலை சிவில் இன்ஜினியர்ஸ் அசோசியேசன் உதவியை நாடினேன். அவர்களும் எனக்கு குளித்தலை நகராட்சியிலிருந்து ஒரு பதிலை பெற்றுக்கொடுத்தனர். அந்த பதில் கடிதத்தில் என்னிடம் இருக்கும் வரைபடத்திற்கும், நகராட்சி அலுவலகத்தில் உள்ள வரைபடத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே, நான் குளித்தலை நகராட்சி அலுவலகத்திற்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள எனது வீட்டின் வரைபடத்தின் நகல் கொடுக்குமாறும், எனது வீட்டின் வரைபடத்தை போலியாக தயார் செய்து கொடுத்த திரு.அண்ணாதுரை மற்றும் அவருடன் தொடர்பில் உள்ளவர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கக் கோரியும் மனு செய்தேன். ஆனால் நகராட்சி ஆணையர் எனது மனுவை நிராகரித்து எனக்கு நகல் வழங்க மறுத்து கடிதம் ஒன்றை 10.01.2023 அன்று அனுப்பினார்.

அதன்பிறகு, நான் வீடுகட்டும் பொழுது எனது வீட்டிற்கு நகராட்சியில் அனுமதி பெற்று கொடுத்த பாரதி கன்ஸ்ட்ரக்ஸன் உரிமையாளர் திரு.அண்ணாதுரை என்பவர் மீதும், குளித்தலை நகராட்சி ஆணையர் பொறுப்பில் இருந்த திரு.மனோகர் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கக் கோரி நகராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களுக்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கும் புகார் மனு ஒன்றை 20.01.2023 அன்று அனுப்பினேன். அதன்பிறகு கடந்த 24.03.2023 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் இருந்து ஒரு கடிதம் கிடைக்கப்பெற்றேன். அதில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களுக்கு எனது புகார் மனு தொடர்பாக ஒருவார காலத்திற்குள் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் இதுநாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதற்கிடையில் கடந்த 03.04.2023 அன்று குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் இருந்து ஒரு கடிதம் கிடைக்கப்பெற்றேன். அதில் மேல்சொன்ன கட்டுமான நிறுவன உரிமையாளருக்கு விளக்கம் கேட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்று

தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவுப்படி ஒரு வார காலத்திற்குள் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் குளித்தலை நகராட்சி ஆணையரும், நகராட்சிகளின் மண்டல இயக்குநரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, தங்கள் மன்றத்தில் நான் முறையீடு செய்தேன்.

இதற்கிடையில் குளித்தலை நகராட்சி Town Planning Inspector திரு.முருகேசன் என்பவர் என்னை 13.06.2023 அன்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு நீங்கள் சென்னையில் புகார் கொடுத்துள்ளீர்களா என கேட்டார் நானும் ஆம், கொடுத்துள்ளேன் என கூறினேன். அதன் பிறகே குளித்தலை நகராட்சி அதிகாரிகள் எனது மனுமீது கவனம் செலுத்துகிறார்கள். எனக்கு குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் வழங்கியது போன்ற போலியான ஒரு வரைபடத்தை தயார் செய்து கொடுத்தவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.மனோகர் என்பவர், தமிழ்நாடு நகராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்கள் உத்தரவிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்காத சேலம் மண்டல நகராட்சிகளின் இயக்குநர் திரு. ராஜன் என்பவர் மற்றும் எனது வரைபடத்தின் உண்மைத்தன்மைச் சான்று கோரியும் எனக்கு வழங்காத குளித்தலை நகராட்சியின் முன்னாள் ஆணையர் (பொறுப்பு) ராதா அவர்களும் போலிவரைபடம் தயார் செய்யும் கும்பலுடன் தொடர்பில் உள்ளார்களோ என்ற சந்தேகமாக உள்ளது. எனவே, ஐயா அவர்கள் எனது மனுவினை பரிசீலித்து மேல்சொன்ன அதிகாரிகள் ஏன் எனது மனு மீதும், தவறு செய்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும் தீர விசாரணை செய்து சம்பந்தப்பட்ட குற்றம் புரிந்த நபர்கள் மீதும், அவர்களுக்கு உதவியாக இருந்து அவர்களை காப்பாற்ற முயன்ற நகராட்சி அதிகாரிகள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் குளித்தலை நகராட்சிக்கு தொடர்பில்லாத ஒரு அதிகாரியை நியமனம் செய்து நான் மட்டும்தான் ஏமாற்றப்பட்டேனா அல்லது இதுபோன்று வேறு யாரேனும் ஏமாற்றப்பட்டுள்ளனரா என்பதையும், இதுபோன்று குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் எத்தனை போலி வரைபட அனுமதி உள்ளது என்பதையும், அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் ஆய்வு செய்து சம்பந்தப்பட்டவர்கள் மீதும், அதற்கு துணைபோன நகராட்சி அலுவலர்கள் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்க உத்தரவிடவேண்டி தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) எதிர்மனுதாரரான குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி சார்பாக எந்த அலுவலரும் 26.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகாததால் அதனை இம்முறைமன்றம் கண்டித்து மீண்டும் 07.08.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.07.2023 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

(7) எதிர்மனுதாரரான குளித்தலை நகராட்சி ஆணையர் 07.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரர் திரு.V.சரவணன் என்பவரின் மனைவிக்கு சொந்தமான குளித்தலை நகராட்சி, வைகை நல்லூர் வார்டு C பிளாக் 33 T S No. 56ல் அமைந்துள்ள இடத்திற்கு

கட்டடவரைபட அனுமதி 28.8.2012ல் குளித்தலை நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சியால் வழங்கப்பட்ட வரைபடத்திற்கும், மனுதாரரிடம் உள்ள வரைபடத்திற்கும் வித்தியாசம் உள்ளது எனவும், வரைபடம் போலியாக உள்ளது எனவும், எனவே போலியாக வரைபடம் தயாரித்து கொடுத்துள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி மனுதாரர் புகார் மனு அனுப்பியதைத் தொடர்ந்து மேற்கண்ட இரண்டு வரைபடங்களும் ஆய்வு செய்யப்பட்டது. நகராட்சியில் உள்ள வரைபடத்திற்கும், மனுதாரரிடம் உள்ள வரைபடத்திற்கும் வித்தியாசங்கள் உள்ளன. அதில் உள்ள நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வர் கையொப்பங்களும் போலியாக போடப்பட்டுள்ளன. எனவே, இது குறித்து குளித்தலை காவல் நிலையத்தில் 14.6.2023 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு பதிவுத் தபால் மூலம் புகார்மனு அளிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம் முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 3.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

8) குளித்தலை நகராட்சி ஆணையாளர் தனது 03.08.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''திரு.வே.சரவணன் என்பவர் 02.01.2023 நாளிட்ட தனது மனுவில், வைகைநல்லூர் வடக்கு கிராமம் Ward C, Block 33, T.S.No.56, கொல்லம்பட்டறை தெரு, குளித்தலை நகராட்சி என்ற இடத்தில் திருமதி.ச.சங்கீதா என்பவருக்கு நகராட்சி மூலம் வழங்கப்பட்ட கட்டட அனுமதி வரைபடத்திற்கும் நகராட்சியில் உள்ள கட்டட வரைபடத்திற்கும் வித்தியாசம் உள்ளது எனவும், போலியாக வரைபடம் தயாரித்து கொடுத்த நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் தெரிவித்துள்ளார்.

நகராட்சி நிர்வாக சேலம் மண்டல இயக்குநரின் 23.02.2023 மற்றும் 10.04.2023 கடிதங்கள், கரூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் 08.02.2023 நாளிட்ட கடிதம் மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரின் 24.03.2023 நாளிட்ட கடிதம் ஆகியவற்றில், மேற்கண்டவாறு போலியாக வரைபடம் தயாரித்து கொடுத்த நபர்கள் மீது காவல் துறையில் புகார் அளித்து அதன்பேரிலான அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சிக்கு தெரிவித்துள்ளார்கள்.

குளித்தலை நகராட்சி கொல்லம்பட்டறை தெருவை சார்ந்த திருமதி.ச.சங்கீதா என்பவர், வைகைநல்லூர் வடக்கு கிராமம் Ward C, Block 33, T.S.No.56, என்ற இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு கட்டட அனுமதி கோரி 22.08.2012–ல் விண்ணப்பம் அளித்துள்ளார். அன்னாருக்கு குளித்தலை நகராட்சி சார்பில் தரைத்தளம் 726 ச.அடி (67.47 ச.மீ) முதல் தளம் 420 ச.அடி (39.03 ச.மீ) பரப்பளவிற்கான கட்டட அனுமதி எண்.2012/36, நாள்.28.08.2012–ல் வழங்கப்பட்டது. மேற்கண்ட கட்டட வரைபடம், நகராட்சியில் கட்டட படவரைவாளராக உள்ள திரு.திருமுகன் என்பவர் மூலம் கட்டட அனுமதி வரைபடம் வழங்கப்பட்டது. தற்போது மனுதாரர் திருமதி.ச.சங்கீதா என்பவரிடம் தரைத்தளம் 726.00 ச.அடி (67.47 ச.மீ) முதல்தளம் 726.00 ச.அடி

(67.47 ச.மீ) என்ற அளவில் போலியாக வரைபடம் தயாரிக்கப்பட்டு மனுதாரரிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வரைபடத்தில் திரு.ரமேஷ்பாபு, பொறியாளர் திருச்சி என்பவர் கையொப்பம் இட்டுள்ளார். குளித்தலை நகராட்சியின் மூலம் வழங்கப்பட்ட கட்டட அனுமதியும், போலியாக உள்ள கட்டட அனுமதியும் ஒரே எண்ணாக உள்ளது. மேலும், குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வர் முத்திரைகளும் ஒன்றாக உள்ளது. இந்த வரைபடத்தில் நகராட்சி ஆணையர், நகராட்சி நகரமைப்பு ஆய்வர் ஆகியோரின் கையொப்பம் போலியாக உள்ளது. மேற்கண்ட கட்டடத்திற்கு திரு.அண்ணாதுரை, பாரதி கன்ஸ்ட்ரக்சன் என்பவர் மூலம் கட்டடப்பணி முடிக்கப்பட்டதாக திரு.வே.சரவணன், த/பெ. வேலாயுதன் என்பவர் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட நபர்கள் நகராட்சி விசாரணைக்கு ஆஜராகாத காரணத்தினால், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மேற்கண்ட நபர்கள் மீது குளித்தலை காவல் நிலையத்தில் 14.06.2023 அன்று புகார்மனு உள்ளூர் தபால் மூலம் நேரில் வழங்கப்பட்டது. மேலும், புகார்மனு 14.06.2023 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு பதிவுத் தபால் மூலம் அளிக்கப்பட்டுள்ளது. 05.07.2023 வரை காவல்துறை மூலம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததால், இணையதளம் வாயிலாக 06.07.2023 அன்று மீண்டும் புகார்மனு பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது மனுவின் நிலை குளித்தலை காவல் நிலையத்தில் நிலுவையில் உள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(9) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலங்கள், குளித்தலை நகராட்சி ஆணையரின் (பொறுப்பு) அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கரூர் மாவட்டம், குளித்தலையைச் சேர்ந்த மனுதாரர் திரு.V.சரவணன் என்பவர் தனது 10.05.2023 நாளிட்ட மனுவில், குளித்தலை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14, 11/15, கொல்லம்பட்டறை தெரு என்கிற முகவரியில் அமைந்திருக்கும் தனது வீட்டு கட்டட அனுமதி வரைபடத்தின் உண்மை தன்மை சான்று வழங்கக் கோரி 06.07.2022 அன்று குளித்தலை நகராட்சியில் முறையிட்டதில் இந்நாள்வரை சான்று வழங்கப்படவில்லை எனவும், தான் வீடு கட்டும்போது போலியான வரைபட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்தது

தொடர்பாக புகார்மனுவினை குளித்தலை நகராட்சியில் அளித்தும் எவ்வித தகவலும் கிடைக்கப்பெறவில்லை என்பதால், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு முறையிட்டதில், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திலிருந்து சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு 1 வார காலத்திற்குள் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனவும், ஆனால் இந்நாள்வரை எவ்வித பதிலும் கிடைக்கப்பெறவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் புகார் தெரிவித்து இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார்.

குளித்தலையைச் சார்ந்த மனுதாரர் திரு.V.சரவணன் தனது மனைவி திருமதி.S.சங்கீதா பெயரிலுள்ள, குளித்தலை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14, 11/15, கொல்லம்பட்டறை என்ற முகவரியில் வீட்டினை கட்டுவதற்கு குளித்தலை பேராளம்மன் கோவில் தெருவை சார்ந்த பாரதி கன்ஸ்ட்ரக்ஸன் உரிமையாளர் திரு.அண்ணாமலை என்பவர் மூலம் வீடு கட்டும் பணியினை மேற்கொண்டு, 28.08.2012 நாளிட்ட குளித்தலை நகராட்சி உள்ளூர் திட்டக்குழும, திட்ட அனுமதி உத்தரவு மற்றும் 28.08.2012 நாளிட்ட அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்துடன் குளித்தலை நகராட்சியின் கட்டட அனுமதி உத்தரவும் மனுதாரர் பெற்றுள்ளார்.

மனுதாரர் திரு.V.சரவணன் என்பவரால் அளிக்கப்பட்ட புகாரான அவரது மனைவி திருமதி.சங்கீதா என்பவரின் பெயரில் கட்டப்பட்ட கட்டடத்தின் வரைப்படத்தின் உண்மைத்தன்மை அறியும் பொருட்டு, மனுதாரர் சமர்பித்த குடியிருப்பு ஆவணங்கள் குளித்தலை நகராட்சியின் மூலஆவணங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்க்காணும் முரண்பாடுகள் கண்டறியப்பட்டன.

- மனுதாரர் திரு.V.சரவணன் என்பவர் சமர்ப்பித்துள்ள 28.08.2012 நாளிட்ட குளித்தலை நகராட்சி உள்ளூர் திட்டக் குழுமத்தால் வழங்கப்பட்ட திட்ட அனுமதி உத்தரவில் உள்ள குளித்தலை நகராட்சி ஆணையாளரின் கையொப்பம் மற்றும் 28.08.2012 நாளிட்ட குளித்தலை நகராட்சி கட்டட அனுமதி உத்தரவில் உள்ள குளித்தலை நகராட்சி ஆணையாளரின் கையாப்பமும், நகராட்சியின் மூலஆவணங்களில் உள்ள நகராட்சி ஆணையாளரின் கையொப்பமும் மாறுபடுகிறது.
- மனுதாரர் திரு.V.சரவணன் என்பவர் சமர்ப்பித்துள்ள 28.08.2012 நாளிட்ட கட்டட அனுமதி வரைபடத்தில் தரைதளம் 726 சதூடி (67.47 ச.மீ), முதல் தளம் 726 சதூடி, (67.47 ச.மீ) பரப்பளவு கொண்டதாக திரு.ரமேஷ்பாபு, பொறியாளர் , திருச்சி என்பவர்

கையொப்பமிட்டுள்ளார். ஆனால், நகராட்சி அலுவலக கோப்பில் மேற்காணும் 28.08.2012 நாளிட்ட கட்டட அனுமதி வரைபடத்தில் நகராட்சியில் கட்டட படவரைவாளராக உள்ள திரு.திருமுகன் என்பவர் மூலம் தரைதளம் 726 சதுரடி (67.47 ச.மீ) முதல்தளம் 420 சதுரடி (39.03 ச.மீ) பரப்பளவிற்கான கட்டட வரைபடம் வழங்கப்பட்டுள்ளது.

- மனுதாரர் திரு.V.சரவணன் என்பவர் சமர்ப்பித்துள்ள 28.08.2012 நாளிட்ட கட்டட அனுமதி வரைபடத்திலுள்ள குளித்தலை நகராட்சி ஆணையர் கையொப்பமும் மற்றும் நகரமைப்பு ஆய்வரின் கையொப்பமும், நகராட்சியில் கையாளப்பட்டுள்ள வரைபட அனுமதிக்கான நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வரின் கையொப்பமும் மாறுபட்டு ஒன்றுக்கொன்று முரண்பாடாக உள்ளது.

மேற்கண்டவாறு மனுதாரர் திரு.V.சரவணன் என்பவரின் மனைவி திருமதி.S.சங்கீதா என்பவரிடமுள்ள கட்டட அனுமதி வரைபடம் மற்றும் குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் நகரமைப்புப் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து முரண்பாடாக உள்ளதுகுறித்து குளித்தலை நகராட்சி ஆணையாளர் மூலம் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனுதாரர் திரு.V.சரவணன் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புகாரினை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம் மூலமாக விசாரணை மேற்கொண்டால் மட்டுமே புகார் குறித்த உண்மைத்தன்மையினை அறிய இயலும் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும் மனுதாரர் திரு.V.சரவணன் என்பவருக்கு கட்டட அனுமதி வரைபடம் வழங்கப்பட்ட காலக்கட்டத்தில், இதுபோன்றே பிற நபர்களுக்கும் வழங்கப்பட்ட கட்டட அனுமதி வரைபடங்கள் குறித்தான உண்மைத் தன்மை குறித்து அய்யப்பாடு எழுகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் விசாரணை ஒன்றினை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, புலனாய்வு முகவாண்மை எதன் பணியினையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6 (4) (அ)ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் திரு.V.சரவணன் என்பவரின் புகாரினையும் மற்றும் இதுபோன்று அக்காலகட்டத்தில் குளித்தலை நகராட்சியால் அங்கீகரித்து வழங்கப்பட்ட கட்டட அனுமதி வரைப்படங்கள் குறித்தும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக விசாரணைக்கு உட்படுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே 2014 ஆம்

ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6 (4) (a)ன் கீழ் ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) இயக்குநர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை,
எண். 293, எம்.கே.என்.சாலை, ஆலந்தூர்,
சென்னை – 600 016, (இணைப்புடன்).

2) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

3) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

4) ஆணையாளர், குளித்தலை நகராட்சி, குளித்தலை – 639 104,
கரூர் மாவட்டம்.

5) திரு. V. சரவணன்,
11–15, கொல்லம்பட்டறை தெரு,
குளித்தலை – 639 104, கரூர் மாவட்டம்.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்